
### சிறப்புக்குறிப்பு 1
### உயர் நடுத்தர வருமான நாடு என்ற படிநிலைக்கு இலங்கையின் உயர்வு

2019 யூலையில் வெளியிடப்பட்ட நாடுகள் தொடர்பான உலக வங்கியின் வகைப்படுத்தலின்படி, இலங்கை உயர் நடுத்தரளவு வருமான நாடொன்றாக உயர்ந்திருக்கிறது. உலக வங்கி தலைக்குரிய மொத்தத் தேசிய வருமானத்தின் அடிப்படையில் நாடுகளைக் *குறைந்த வருமானம், குறைந்த நடுத்தர வருமானம், உயர் நடுத்தர வருமானம்* மற்றும் *உயர் வருமானம்* கொண்ட வருமான வகைகளின் அடிப்படையில் வகைப்படுத்தியிருக்கிறது[1]. இவ்வகைப்படுத்தலின்படி, இலங்கை குறைந்த வருமான நாடென்ற நிலையிலிருந்து 1997இல் தாழ்ந்த நடுத்தர வருமான நாடென்ற அந்தஸ்திற்கு நிலை மாறிக் கொண்டது. அதிலிருந்து 2004இன் சுனாமி பேரனர்த்தம், 2009 வரை அதிகரித்தளவில் காணப்பட்ட உள்நாட்டு மோதல்கள், தீவிரமான வானிலை நிலைமைகள் மற்றும் அதனுடன் தொடர்பான இயற்கை அனர்த்தங்கள் மற்றும் சமூக, பொருளாதார மற்றும் அரசியல் மாற்றங்கள் உள்ளிட்ட சவால் நிறைந்த காலங்களுக்கூடாக நாடு முன்னேற்றம் கண்டு வந்திருக்கிறது. பேரண்டப் பொருளாதாரத்தின் மீது அத்தகைய இடையூறுகளின் மோசமான தாக்கம் காணப்பட்டமைக்கிடையிலும், நாடு தாழ்ந்த நடுத்தர வருமான நாடு என்ற அந்தஸ்தினைப் பெற்றதிலிருந்து சராசரியாக மொ.உ.உற்பத்தியில் ஐந்து சதவீதத்திற்கு மேலான வளர்ச்சியைப் பதிவுசெய்ததுடன் உயர்ந்த நடுத்தர வருமான நாடு என்ற நிலையினை அடைந்திருக்கிறது. எனினும், இலங்கை தாழ்ந்த நடுத்தர வருமான நாடென்ற நிலையிலிருந்து அடுத்த கட்டத்திற்கு உயர்வடைவதற்கு 21 ஆண்டுகளைச் செலவிட வேண்டியிருந்திருக்கிறது. தோற்றம்பெற்று வருகின்ற மற்றைய சில நாடுகளுடன் ஒப்பிடுகையில் இக்காலம் ஒப்பீட்டு ரீதியில் நீண்டதொரு செலவிடல் காலமேயாகும். இத்தகையதொரு பின்னணியில் எதிர்வரும் காலத்தில் நடுத்தர வருமான மட்டத்தில் அதாவது *நடுத்தர வருமான பொறியில்*[2] சிக்குண்டு நீண்ட காலம் தேக்க நிலையொன்றில் இருக்கும் சாத்திய நிலையினை தவிர்க்கும் விதத்தில் எதிர்வரும் காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் வலுவான வளர்ச்சி உத்வேகத்தினை உறுதிப்படுத்தும் விதத்தில் சரியான நேரக் கட்டமைப்புடன் கூடிய அவசியமான அமைப்பியல் சீர்திருத்தங்களை இலங்கை அறிமுகப்படுத்துவது இன்றியமையாததாகும். அட்டவணை சி.கு. 1.1 தெரிந்தெடுக்கப்பட்ட நாடுகள் உயர் நடுத்தர வருமான

வரைபடம் சி.கு 1.1
தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரங்களின் மொத்தத் தேசிய வருமானம் மற்றும் உலக வங்கியின் வருமான வகைப்படுத்தல் மட்டங்களின் பரிமாணங்களும்




*மூலம்:* உலக வங்கி தரவுகள்

அட்டவணை சி.கு. 1.1
உயர் நடுத்தர வருமானத்திலிருந்து உயர் வருமான மட்டங்களுக்கு நகர்வதற்கு தெரிவுசெய்யப்பட்ட பொருளாதாரங்களுக்குத் தேவைப்பட்ட ஆண்டுகளின் எண்ணிக்கை

| நாடு | உயர் நடுத்தர வருமான வகை அந்தஸ்த்தை அடைந்த ஆண்டு | உயர் வருமான வகை அந்தஸ்த்தை அடைந்த ஆண்டு | உயர் நடுத்தர வருமான வகையிலிருந்த ஆண்டுகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| ஹொங்கொங், சீனா | 1976 | 1983 | 7 |
| கொரியாக் குடியரசு | 1988 | 1995 | 7 |
| யப்பான் | 1968 | 1977 | 9 |
| சிங்கப்பூர் | 1978 | 1988 | 10 |
| பிரான்ஸ் | 1960 | 1971 | 11 |
| ஒஸ்ரியா | 1964 | 1976 | 12 |
| பெல்ஜியம் | 1961 | 1973 | 12 |
| ஜேர்மனி | 1960 | 1973 | 13 |
| சிலி | 1992 | 2005 | 13 |
| நோர்வே | 1961 | 1975 | 14 |
| சுவீடன் | 1954 | 1968 | 14 |
| டென்மார்க் | 1953 | 1968 | 15 |
| பின்லாந்து | 1964 | 1979 | 15 |
| அயர்லாந்து | 1975 | 1990 | 15 |
| இத்தாலி | 1963 | 1978 | 15 |
| நெதர்லாந்து | 1955 | 1970 | 15 |
| ஸ்பெயின் | 1973 | 1990 | 17 |
| இஸ்ரேல் | 1969 | 1986 | 17 |
| போர்த்துக்கல் | 1978 | 1996 | 18 |
| கிரேக்கம் | 1972 | 2000 | 28 |
| ஆஜர்ன்டீனா | 1970 | 2010 | 40 |

*மூலம்:* பிலிப், அப்டொன், குமாரின் மதிப்பீடுகள் (2012)

*குறிப்பு:* இவ்வாய்விலுள்ள வருமான குழுக்கள் உலக வங்கியின் பகுப்பாய்விலிருந்து வேறுபடுகின்றன

1 2018இற்கான வகைப்படுத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட தரவு, உலக வங்கி நாடுகளை அவற்றின் மொத்தத் தேசிய வருமானத்தின் அடிப்படையில் பின்வருமாறு வகைப்படுத்தியிருக்கிறது. குறைந்த வருமானம் - ஐ.அ.டொலர் 1,025 அல்லது அதற்கும் குறைய, தாழ்ந்த நடுத்தர வருமானம் - ஐ.அ.டொலர் 1,026 மற்றும் ஐ.அ.டொலர் 3,995 இற்குமிடையில், உயர் நடுத்தர வருமானம் ஐ.அ.டொலர் 3,996 மற்றும் ஐ.அ.டொலர் 12,375 இற்குமிடையில், உயர் வருமானம் - ஐ.அ.டொலர் 12,376 அல்லது அதற்கும் மேல் இவ்வளவுகளை உலக வங்கி ஒவ்வோராண்டும் யூலை மாதத்தில் இற்றைப்படுத்தி வருகிறது. கூடுதலான தகவல்களுக்குத் தயவுசெய்து பார்க்கவும் https://datahelpdesk.worldbank.org/knowledgebase/articles/906519-world-bank-country-and-lending-groups உலக வங்கி, நாட்டின் பணவீக்கத்திற்கும் பன்னாட்டு பணவீக்கத்திற்குமிடையிலான வேறுபாடுகளுக்கான சீராக்கங்களைச் செய்த பின்னர், செலாவணி வீதத்தின் மூன்றாண்டு அசையும் சராசரிகளின் அடிப்படையில் கணிக்கப்பட்ட அற்லஸ் மாற்றல் காரணிகளைப் பிரயோகிப்பதன் மூலம் தேசிய நாணயத்திலான மொத்தத் தேசிய வருமானத்தினை ஐ.அ.டொலருக்கு மாற்றுவதற்கு அட்லஸ் முறையினைப் பயன்படுத்துகின்றது

2 சில பகுப்பாய்வுகளின்படி, இலங்கை நடுத்தர வருமானப் பொறி என அழைக்கப்படும் பொறிக்குள் சிக்குண்டு இருக்கிறது. பொருளியலாளர்கள், நடுத்தர வருமான மட்டங்களுக்குள் மிக விரைவாக நகர்ந்து கொண்ட நாடுகள் உயர் வருமான மட்டத்தினை அடைந்து கொள்ளும் விதத்தில் அத்தகைய வளர்ச்சி உத்வேகத்தினைத் தொடர்வதற்கு தவறி வருகின்ற நிலைமையினை எடுத்துக்காட்டுவதற்கே இப்பதத்தினை பயன்படுத்துகின்றனர். நடுத்தர வருமானப் பொறி என்ற வரைவிலக்கணம், நடுத்தர வருமானப் பொறிக்குள் சிக்குண்ட நாடுகள் என அங்கீகரிக்கப்பட்ட நாடுகளின் எண்ணிக்கையினைத் தருகின்ற விதத்தில் வேறுபட்ட ஆசிரியர்களினால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளில் உடன்பட்ட தன்மைகள் காணப்படவில்லை. எடுத்துக்காட்டாக, புறுச்நிக் மற்றும் சோவிஷார் (2017) நடுத்தர வருமானப் பொறி ஆய்வில் அத்தகைய வேறுபாட்டுப் பங்களிப்புக்களை ஒப்பீடு செய்தமையின் மூலம் இரண்டு ஆய்வுகளின்படி இலங்கை நடுத்தர வருமானப் பொறிக்குள் சிக்குண்டு இருப்பதனையும் அத்தகைய தேக்க நிலையினைத் தவிர்ப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய வழிமுறைகளையும் எடுத்துக்காட்டியிருக்கின்றனர்.

1

மட்டத்திலிருந்து உயர் வருமான மட்டங்களுக்கு உயர்ந்து கொள்வதற்கு எடுத்த காலப்பகுதியைத் தெளிவாகக் காட்டுகிறது. இக்காலம் 7 ஆண்டுகளிலிருந்து 40 ஆண்டுகள் வரையிலான வீச்சினைக் கொண்டிருக்கிறது[3]. நடுத்தர வருமான மட்டத்திற்குள் நாடுகள் ஏன் சிக்கிக் கொண்டுள்ளன என்பதற்கான காரணங்கள் தொடர்பில் ஒருமித்த கருத்துக்கள் காணப்படாத போதும், மோசமானளவிற்குப் பொருளாதாரம் பன்முகப்படுத்தப்படாமை, நெகிழ்ச்சித்தன்மையற்ற, வினைத்திறனற்ற தொழிற்சந்தை, முன்னேற்றம் கண்ட உட்கட்டமைப்பு கிடைக்காததன்மை பலயீனமான நிறுவனங்கள், புத்தாக்கங்கள் குறைந்த மட்டத்தில் காணப்படும் தன்மை போன்ற காரணங்களே உற்பத்தியாக்கத்தின் மெதுவான தன்மைக்குப் பங்களித்த முக்கிய காரணிகளாகக் குறிப்பிடப்பட்டு வருகின்றன. எடுத்துக்காட்டாக, புறுச்நிக் மற்றும் சோவிஷார் (2017) மெதுவான வளர்ச்சியுடன் பொதுவாக இணைந்து காணப்படும் ஏழு காரணிகளைத் துலாம்பரமாகக் குறிப்பிடுகின்றனர். அவையாவன: சாதகமற்ற மக்கள் தொகையியில், குறைந்தமட்ட பொருளாதார பன்முகப்படுத்தல், வினைத்திறனற்ற நிதியியல் சந்தைகள், முன்னேற்றம் கண்ட உட்கட்டமைப்பு போதியளவில் இல்லாமை, குறைந்த மட்டத்திலான புத்தாக்கம், பலயீனமான நிறுவனங்கள் மற்றும் வினைத்திறனற்ற தொழிலாளர் சந்தைகள். புறுச்நிக் மற்றும் சோவிஷார் (2017)இன் பகுப்பாய்வின்படி, இலங்கை பொருளாதார பன்முகப்படுத்தல் மற்றும் தொழிற்சந்தை வினைத்திறனின் மட்டங்களில் 20 சதவீதம் கொண்ட அடிமட்டத்திலேயே தொடர்ந்தும் காணப்படுகிறது. இத்தகைய பின்னணியொன்றில், இத்துறைகளிலிருந்து எழுகின்ற சவால்களைக் கட்டுப்படுத்துவதற்குத் தேவையான வழிமுறைகளை மேற்கொள்கின்ற அதே வேளையில் வருமான சமமின்மைகள், வறுமை ஒழிப்பு போன்ற பிரச்சனைகளைக் கட்டுப்படுத்துவதனை வலியுறுத்தவேண்டும். இதன் மூலம், எதிர்காலத்தில் நீடித்துநிலைத்திருக்கும் வலுவான வளர்ச்சியும் பகிரப்பட்ட சுபீட்சம் என்பன உறுதிசெய்யப்படும்.

3 மூலம்: Felipe, Abdon and Kumar (2012)

**உசாத்துணைகள்**

1. Felipe, J., Abdon, A. and Kumar, U. (2012) Tracking the middle-income trap: What is it, who is in it, and why?, *Levy Economics Institute, Working Paper No. 715.*

2. Pruchnik, K. and Zowczak, J. (2017) Middle-income trap: Review of the conceptual framework, ADBI Working Paper No. 760.